

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் 9.7.2025 அன்று கரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக கூட்டரங்கில், அனைத்துத் துறை பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் கரூர் சட்டமன்ற உறுப்பினர் வி. செந்தில்பாலாஜி, சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வி. செ. ஜோதிமணி, சட்டமன்ற உறுப்பினர்கள் இரா. மாணிக்கம், ஆர். இளங்கோ, திருமதி. க.சிவகாமசுந்தரி, சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை கூடுதல் செயலாளர் மருத்துவர் ச.உமா, மாவட்ட ஆட்சியர் மீ. தங்கவேல், மேயர் திருமதி. கவிதா, காவல் கண்காணிப்பாளர் கா. பெரோஸ் கான் அப்துல்லா மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 9.7.2025 அன்று கரூர் திருமாநிலையூரில் 40.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் மு.கருணாநிதி பேருந்து நிலையத்தை, கரூர் சட்டமன்ற உறுப்பினர் வி. செந்தில்பாலாஜி முன்னிலையில் திறந்து வைத்து பார்வையிட்டார். இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் செல்வி செ.ஜோதிமணி, கே.இ.பிரகாஷ், சட்டமன்ற உறுப்பினர்கள் இரா.மாணிக்கம், ஆர்.இளங்கோ, சிவகாமசுந்தரி, மாவட்ட ஆட்சியர் மீ.தங்கவேல், மேயர் திருமதி. க.கவிதா, மாவட்ட வருவாய் அலுவலர் ம.கண்ணன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி.ஸ்ரீ.லேகா தமிழ்செல்வன், மாநகராட்சி ஆணையர் திருமதி.கி.மு.கதா உள்பட அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

# எல்லோருக்குமான ‘திராவிட மாடல்’ அரசுக்கு உற்ற துணையாக நீங்கள் இருக்க வேண்டும்!

## கரூரில் – நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேச்சு!

**கரூர், ஜூலை 11-**

**கரூரில் நடைபெற்ற அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்து கொண்டு, கரூர் மாவட்டத்தில் ரூ.58.23 கோடி மதிப்பில் நிறைவுபெற்ற 13 பணிகளை திறந்து வைத்ததுடன் 18 ஆயிரத்து 332 பொதுமக்களுக்கு ரூ.163 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை நேற்று முன்தினம் வழங்கினார்.**

இதனைத் தொடர்ந்து காவிரி மீட்புக் குழுவின் உறுப்பினர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மறைந்த சி.முத்துசாமி அவர்களின் திருவுருவச்சிலை அமைப்பது உட்பட ரூ.3.35 கோடி மதிப்பிலான 3 பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்.

விழாவில் 13 ஆயிரத்து 124 பொதுமக்களுக்கு பட்டா கலைஞர் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் வீடு கட்டிக் கொள்வதற்கான ஆணைகள் மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு வங்கிக்கடன் இணைப்புகள் மாற்றுத்திறனாளிகளுக்கு மூன்று சக்கர வாகனங்கள் போன்ற நலத்திட்டங்களை வழங்கி வாழ்த்துரையாற்றினார்.

விழாவில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்துகொண்டு ஆற்றிய சிறப்புரையின் விவரம் வருமாறு:

மூன்று நாட்களுக்குள் இவ்வளவு பெரிய நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சியை நடத்த முடியும் என்றால், கரூர் மாவட்டத்தில் மட்டும்தான் சாத்தியம் என்பதை இங்கே நிரூபித்துக் காட்டியுள்ளனர். கரூருக்கு எப்போது வந்தாலும், ஒரு தனி உற்சாகம் பிறக்கும், புத்துணர்ச்சியும் ஏற்படும். இன்றைக்கு இந்த நிகழ்ச்சிக்கு நான் தங்கி இருக்கின்ற அறையிலிருந்து கிளம்பும்போது 5 மணி. இங்கு வந்து நான் சேர்வதற்கு கிட்டத்தட்ட 1 மணி நேரம் ஆனது. உங்களை எல்லாம் சந்திக்கின்ற வாய்ப்பை ஏற்படுத்தி கொடுத்ததற்காக அண்ணன் செந்தில் பாலாஜி அவர்களுக்கு மீண்டும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### புதிதாக பேருந்து நிலையம்

கரூர் எப்போதுமே சிறப்புதான். அதற்கு முதல் காரணம், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஐந்து முறை முதலமைச்சராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர். போட்டியிட்ட அத்தனைத் தொகுதிகளிலும் வென்று காட்டிய ஒரே தலைவர், நம்முடைய முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள். அதற்கெல்லாம் தொடக்கமாக இருந்தது, இன்றைய கரூர் மாவட்டத்தில் இருக்கின்ற குளித்தலை தொகுதிதான். அப்படிப்பட்ட பெருமை வாய்ந்த இந்த கரூர் மாவட்டத்திற்கு வந்து உங்களை எல்லாம் சந்திப்பது எனக்குக் கூடுதல் பெருமை.

இன்றைக்கு 18 ஆயிரம் பேருக்கு நலத்திட்ட உதவிகள் கொடுத்திருக்கிறோம் என்றால், அது 18 ஆயிரம் குடும்பங்களுக்கான நலத்திட்டம் என்றுதான் அர்த்தம். கரூர் மக்களின் உங்களின் நீண்ட நாள் கோரிக்கை, கரூர் மக்களின் கோரிக்கை மட்டுமல்ல, இங்கு இருக்கின்ற அனைத்து சுற்றுவட்டாரத்தில் இருக்கின்ற மாவட்டங்களின் கோரிக்கையாகவும் கரூருக்கு புதிதாக பேருந்து நிலையம் வேண்டும் என்பது இருந்தது. அந்த பேருந்து நிலையத்தை 40 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டி முடித்து, இன்றைக்குத் திறந்து வைக்கின்ற வாய்ப்பை, நீங்கள் எனக்குக் கொடுத்து இருக்கிறீர்கள்.

### 13, 124 பேருக்கு வீட்டுமனைப் பட்டா

இந்த பேருந்து நிலையம் வரக்கூடாது என்று சிலர், பல்வேறு தடைகளை எல்லாம் ஏற்படுத்தினார்கள். வழக்கு தொடரப்பட்டது உங்களுக்குத் தெரியும். ஆனால், அண்ணன் செந்தில் பாலாஜி அவர்கள், அவருக்கே உள்ள பாணியில் இந்த வழக்கையும் முறியடித்து, இன்றைக்கு இந்த பேருந்து நிலையத்தை கரூருக்குக் கொண்டு வந்துள்ளார். அது மட்டுமல்ல, கரூர் மக்களின் 25 ஆண்டு கால கோரிக்கையை நிறைவேற்றும் விதமாக 13 ஆயிரத்து 124 பேருக்கு இன்றைக்கு வீட்டுமனைப் பட்டாக்களையும் வழங்கி இருக்கிறோம். இந்த பட்டா பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்காக, நம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அமைச்சரவையைக் கூட்டி, பட்டா வழங்குவதற்கான நடைமுறைகளை எல்லாம் எளிமையாக்கி, வழங்க உத்தரவிட்டார்.

குறிப்பாக, நம் அரசு அமைந்தது முதல் நான்கு ஆண்டுகளில் இதுவரை 18 லட்சத்து 30 ஆயிரம் பட்டாக்களைக் கொடுத்திருக்கிறோம். அதன் தொடர்ச்சியாகத்தான் இன்றைக்கு மட்டும் 13 ஆயிரம் பட்டாக்களை நான் கொடுக்க இருக்கிறேன். ஏனென்றால், பட்டா என்பது நீங்கள் குடியிருக்கக்கூடிய இடத்திற்கான உங்களின் சட்டப்பூர்வமான உரிமை. அந்த உரிமையை நம் திராவிட மாடல் அரசு, நம் முதலமைச்சர் அவர்கள் இன்றைக்கு நிலைநாட்டி இருக்கிறார்.

இருக்க இடம், உண்ண உணவு, உடுத்த உடை இதுதான் ஒவ்வொரு மனிதனுக்கும் தேவையான, அத்தியாவசியமான பொருட்கள். அதில், இருக்க இடம் என்னும் தேவையைப் பூர்த்தி செய்ய நம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ‘கலைஞர் கனவு இல்லம்’ திட்டத்தின் கீழ் அதற்கும் இன்றைக்கு ஆணைகளை வெளியிடுகிறோம். இங்கு வீடு தொடர்பான ஆணைகளை பெற இருக்கின்ற 310 பயனாளிகளுக்கும் என் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



### சுயஉதவிக் குழுக்கள்

கூட்டுறவுத்துறை மற்றும் மகளிர் திட்டத்தின் மூலம் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு 1,100 மகளிருக்கு ரூபாய் 14 கோடி அளவிற்கு வங்கிக்கடன் இணைப்புகளை, இங்கே வழங்க இருக்கிறோம். இதற்கு முன்பு நடந்த, பத்தாண்டு கால ஆட்சியில், இந்த சுயஉதவிக் குழுக்கள் எல்லாம் கொஞ்சம் செயலிழந்து போய் விட்டனது. நம் முதலமைச்சர் தலைமையிலான அரசு அமைந்த பிறகுதான் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு இன்று புத்துயிர் பிறந்திருக்கிறது. இந்த நான்கு ஆண்டுகளில் மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு மட்டும், ஒரு லட்சம் கோடி அளவிற்கு கடன் இணைப்புகளை வழங்கி சாதனை படைத்துள்ளோம்.

### முதல் கையெழுத்து

இன்றைக்கு நம் முதலமைச்சர் அவர்கள் மகளிருக்காக ஏராளமான திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார். ஆட்சிக்கு வந்ததும், நம் முதலமைச்சர் போட்ட முதல் கையெழுத்தே மகளிருக்கான கட்டணமில்லா விடியல் பயணம் திட்டம்தான் என்பதை நீங்கள் அறிவீர்கள். நான்கு ஆண்டுகளில் இந்தத் திட்டத்தின் கீழ் மகளிர் கிட்டத்தட்ட 730 கோடி பயணங்களை மேற்கொண்டு இருக்கிறார்கள். இந்த மாவட்டத்தில் மட்டும் 11 கோடியே 19 லட்சம் பயணங்களை விடியல் பயணம் திட்டத்தின் கீழ் மகளிர் மேற்கொண்டு இருக்கிறார்கள். இதுதான் இந்த திட்டத்தின் வெற்றி.

அதேபோல் புதுமைப்பெண், தமிழ்ப்புதல்வன் திட்டத்தைச் செயல்படுத்தினார். அரசுப் பள்ளியில் படித்து உயர்கல்வியில் சேர்க்கின்ற அனைத்து மாணவ, மாணவியர்களுக்கும் மாதம் ஆயிரம் ரூபாய் கல்வி ஊக்கத்தொகையை நம் முதலமைச்சர் அவர்கள் வழங்குகிறார். இந்தத் திட்டத்தின் மூலம் தமிழ்நாட்டில் 8 லட்சம் மாணவ, மாணவிகள் பயன்பெற்று வருகிறார்கள். கரூர் மாவட்டத்தில் மட்டும் 15 ஆயிரம் மாணவ, மாணவிகள் பயன்பெற்று வருகிறார்கள்.

### 18 லட்சம் குழந்தைகள்

இந்தியாவிலேயே காலை உணவுத் திட்டத்தை நம் முதலமைச்சர் அவர்கள் முதன்முறையாக அறிமுகப்படுத்தினார். இந்தத் திட்டத்தின் மூலம் ஒவ்வொரு நாளும் 18 லட்சம் குழந்தைகள் பயன்பெற்று வருகிறார்கள்.

கரூர் மாவட்டத்தில் மட்டும், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தின் கீழ் 31 ஆயிரம் குழந்தைகள் தினமும் இத்திட்டத்தில் பயன்பெற்று வருகிறார்கள்.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக இந்தியாவே திரும்பிப் பார்க்கின்ற ஒரு திட்டம்தான் கலைஞர் மகளிர் உரிமைத்தொகைத் திட்டம். 22 மாதங்களாகக் கொடுத்து வருகிறோம். ஒவ்வொரு மாதமும் 1 கோடியே 15 லட்சம் மகளிருக்கு நம் முதலமைச்சர் அவர்கள் 1,000 ரூபாய் உரிமைத்தொகையைக் கொடுத்து இருக்கிறார். இந்த கரூர் மாவட்டத்தில் மட்டும் மகளிர் உரிமைத்தொகைத் திட்டத்தின் மூலம் 1 லட்சத்து 70 ஆயிரம் குடும்பத் தலைவிகள் மாதந்தோறும் பயன்பெற்று வருகிறார்கள்.

அதுமட்டுமல்ல இந்தத் திட்டத்தில் புதிதாக விண்ணப்பிக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதற்கான விதிகளை எல்லாம் நம் முதலமைச்சர் அவர்கள் தளர்த்தி இருக்கிறார்கள். இந்தத் திட்டத்தின் மூலமாகத்தான் தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சி இன்றைக்கு 9.69 சதவிகிதமாக உயர்ந்து, இந்தியாவிலேயே முதல் இடத்தில் இருக்கிறது நம் தமிழ்நாடு. அதற்கெல்லாம் காரணம், நம் திராவிட மாடல் அரசு கொண்டு வந்த பல்வேறு திட்டங்கள்.

### மாற்றுத்திறனாளி மக்கள் பிரதிநிதி

மகளிருக்கு மட்டுமல்ல, இன்றைக்கு மாற்றுத்திறனாளிகளுக்கும் ஏராளமான திட்டங்களை நம் முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்தி வருகிறார். மாற்றுத்திறனாளிகளின் குரல், உள்ளாட்சி அமைப்புகளில் எதிரொலிக்க வேண்டும் என்று, நியமன அடிப்படையில் மாற்றுத்திறனாளிகளை, மக்கள் பிரதிநிதிகளாக நியமிக்க, முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

இப்படி இந்த அரசு எல்லோருக்குமான அரசாக, திராவிட மாடல் அரசாக செயல்பட்டுக்கொண்டு இருக்கிறது. இந்த அரசுக்கு உற்றத்துணையாக நீங்கள் இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு கரூரின் கட்டமைப்பை உயர்த்துகின்ற வகையில், `காய்கறி சந்தை’, `மீன் சந்தை’, `அறிவியல் பூங்கா’ என 75 கோடி ரூபாய் அளவிற்கு திட்டங்களை திறந்து வைத்திருக்கிறோம். அதுமட்டுமல்ல, நம் முதலமைச்சர் அவர்கள் இந்த கரூருக்கு `மினி டைடல் பார்க்’, `முருங்கை ஆராய்ச்சி பூங்கா’ என எண்ணற்ற திட்டங்களைக் கொடுத்து இருக்கிறார்.

### உலகத்தரத்தில் நீச்சல்குளம்

நான் பொறுப்பு வகிக்கின்ற விளையாட்டு மேம்பாட்டுத்துறையின் சார்பாகவும் ஏராளமான திட்டங்களை கரூருக்குத் தந்திருக்கின்றோம். அதில், ஒரு சில திட்டங்களை மட்டும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

கரூர் மாவட்ட விளையாட்டு வளாகத்தில் டென்னிஸ் கோர்ட் மற்றும் உடற்பயிற்சிக் கூடம் அமைக்க, 86 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, கட்டப்பட்டுள்ளது. கரூர் மாவட்ட விளையாட்டு வளாகத்தில் 7 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உலகத்தரத்திலான நீச்சல் குளம் அமைப்பதுடன், மாவட்ட விளையாட்டு வளாகத்தை மேம்படுத்துவதற்கான பணிகளையும் விரைவில் மேற்கொள்ள இருக்கிறோம்.

கரூர் மாவட்டத்தில் 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில், மினி ஸ்டேடியமும் அமைக்கப்பட இருக்கிறது. இந்தத் திட்டங்கள் எல்லாம் 2030ஆம் ஆண்டில் நிச்சயம் தமிழ்நாட்டை `ஒன் டிரில்லியன் டாலர் எக்கனாமி’ கொண்ட மாநிலமாக மாற்றும் என்பதில், எங்களுக்கு எந்தவித சந்தேகமும் இல்லை. இந்தத் திட்டங்களை எல்லாம் நம் அரசு அடுத்த தேர்தலை மனதில் வைத்து செயல்படுத்தவில்லை. அடுத்த தலைமுறையை மனதில் வைத்து, இந்தத் திட்டங்களை முதலமைச்சர் அவர்கள் நிறைவேற்றி வருகின்றார். இந்தத் திட்டங்களைப் பற்றி, நீங்கள் நான்கு பேரிடம் சொல்ல வேண்டும். ஏனென்றால், மக்களாகிய நீங்கள்தான் இந்த திராவிட மாடல் அரசின் பிராண்ட் அம்பாசிடர்கள்.

இங்கு நலத்திட்டங்களைப் பெற்றுள்ள உங்கள் அத்தனைப்பேருக்கும் மீண்டும் எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டு, இந்த குறுகிய காலத்தில் இத்தகைய மிகப்பெரிய நிகழ்ச்சியை ஏற்பாடு செய்த மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கும், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்து விடைபெறுகிறேன்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சிறப்புரையாற்றினார்.

### பங்கேற்றவர்கள்

முன்னாள் அமைச்சரும், சட்டமன்ற உறுப்பினருமான செந்தில் பாலாஜி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜோதிமணி, பிரகாஷ், சட்டமன்ற உறுப்பினர்கள் மாணிக்கம், இளங்கோ, சிவகாமசுந்தரி, மாநகர மேயர் கவிதா கணேசன், மாவட்ட ஆட்சியர் தங்கவேலு ஐ.ஏ.எஸ்., மாநகர துணை மேயர் சரவணன், மாவட்ட வருவாய் அலுவலர் கண்ணன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைத் திட்ட இயக்குநர் ஸ்ரீலேகா தமிழ்ச்செல்வன், மாநகராட்சியின் ஆணையர் சுதா, குளித்தலை சார் ஆட்சியர் ஸ்வாதிஸ்ரீ ஐ.ஏ.எஸ் உள்பட பயனாளிகள் பலரும் கலந்துகொண்டனர்.



கள்ளக்குறிச்சி மாவட்டம், ரிஷிவந்தியம் தொகுதிக்குட்பட்ட, திருக்கோவிலூர் ஊராட்சி ஒன்றியம் கூவனூர் மற்றும் சாங்கியம் கிராமம் இடையே தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே நெடுஞ்சாலைத்துறையின் சார்பில் ரூ.25.20 கோடி மதிப்பீட்டில் புதியதாகக் கட்டப்பட்டு வரும் உயர்மட்டப் பாலம் கட்டுமானப் பணிகளை பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு நேற்று முன்தினம் (09.07.2025) புதன்கிழமை அன்று நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார், இந்த ஆய்வின்போது ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் க.கார்த்திகேயன் உடன் இருந்தார்.



கடலூர் கிழக்கு மாவட்டக் கழக செயற்குழு கூட்டம், காட்டுமன்னார்கோவில்,பெருந்தலைவர் எம்.ஆர்.கே கலையரங்கத்தில்,தேர்தல் பணிக்குழு செயலாளர் இள.புகழேந்தி தலைமையில் நடைபெற்றது. கோ.ஐயப்பன் எம்.எல்.ஏ., தொகுதி பொறுப்பாளர்கள் ஏ.அங்கையற்கன்னி, விஜயன்ராகவன்,சுவை.சுரேஷ், எம்.எம்.சிவா,அ.பாரிபாலன், முன்னாள் எம்.எல்.ஏ., துரை.கி.சரவணன், மாவட்ட கழக பொருளாளர் எம்.ஆர்.கே.பி.கதிரவன், ஆகியோர் முன்னிலை வகித்தனர்.வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சரும், மாவட்ட கழக செயலாளருமான எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் சிறப்புரையாற்றினார். இந்நிகழ்வில் மாவட்ட, மாநகர ஒன்றிய,நகர, பேரூர் கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.